
# *சாராம்சம்*

## தவறான நிதி முகாமைத்துவம்

# பொது பொறுப்புக்கூறலில் காணப்பட்ட குறைபாடு

**கூகுள் புத்தகங்கள்:** ***'Transparency & Public Accountability Fiscal Mismanagement & Lack of Public Accountability Case Study - Sri Lanka, a Country under the purview of IMF, World Bank, ADB'***

***http://www.consultants21.com/page-1-challenges-to-legislations.php***




***அளவு - 8.25" X 11" – பக்கங்கள் 735***

இப்புத்தகத்தில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ள மிக அதிர்ச்சியான விடயம் யாதெனில், இலங்கையின் நிதி முகாமைத்துவம் தொடர்ச்சியாக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களால் மீளாய்வு செய்யப்பட்டு வந்தபோதும், உண்மையிலேயே பாரியளவிலான தவறான நிதி முகாமைத்துவம் மற்றும் பொது பொறுப்புக்கூறலில் குறைபாடுகள் காணப்பட்டதுமன்றி, எவ்வித வெட்கமுமின்றி பொது சொத்துக்களின் அறங்காப்பும் நல்லாட்சியும் வெளிப்படையாகவே மீறப்பட்டுள்ளன.

பொதுமக்களின் வளங்களை அறங்காக்கும் கொள்கையையும்,சமூக ஒப்பந்தங்களையும் உடைத்து இலங்கை பாராளுமன்றமானது, அதிர்ச்சிகரமாக வரி பொதுமன்னிப்பு என்ற பெயரில் மிக அவசரமாக முற்றான ஒரு மன்னிப்பு சட்டத்தை 2003 ஆண்டின் 10ம் இலக்கஉள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டம் என்ற பேரில் வந்தமையானது,விசேடமாக தனி மனிதர் ஒருவர் அத்தகைய சட்டத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்து இலங்கை யாப்பின்படி உச்ச நீதிமன்றில் தடையுத்தரவொன்றினை பெறும் சட்ட உரிமையையும் இல்லாமற் செய்தது.

මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
**MINISTRY OF FINANCE**

මහ ලේකම් කාර්යාලය, කොළඹ 01. செயலகம், கொழும்பு 01. The Secretariat, Colombo 01.

Office 484500 484600 484700 | Fax (941) 449823 | Telex (941)21409 CE

My No. | Your No. | Date 23rd December, 2002.

**"அமைச்சரவை பத்திரம்**

**உள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டம்**

XXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXX

5. *குறித்த சட்ட மூலமானது இலங்கை யாப்பிற்கு முரணானது அல்ல எனவும்,13 வைத்து திருத்தச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள எந்தவொரு தடையையோ கட்டுப்பாட்டையோ மீறவில்லை என்பதாலும் பாராளுமன்றத்தினால் இது சட்ட மூலமாக்கப்படலாம்.*

*இந்த சட்ட மூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியை வேண்டி நிற்கிறேன்.*

K.N . *சொக்சி ஜ.ச பா.உ*
*நிதி அமைச்சர்"*

*நூலாசிரியர் மிக தீவிரமாக* K.N . *சொக்சி ஜ.ச பா.உ அவர்களின் நிதி அமைச்சர் நியமனத்திற்கு எதிராக வாதாடியதுடன் அவர் எழுதிய கடிதத்தின் பகுதி இப் புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளது.*

*பயங்கரவாததிற்கும் பயங்கரவாத நடவடிக்கைகளிற்கும் நிதியளிக்கும் தடைகளை கொண்டிருந்த சர்வதேச ஒப்பந்தமான ஐ நா பாதுகாப்பு சபையின்* 2001*ம் ஆண்டின்* 1373 *வைத்து தீர்மானத்தை மழுங்கடிக்கும் முறையில் கொண்டுவரப்பட்ட இந்த முற்றிலுமான பொது மன்னிப்பானது, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்,ஆயுதங்களை பயன்படுத்தல்,பண மோசடி,போதைப்பொருள் கடத்தல், ஆட்கடத்தல், குற்றவியல் முறைகளில் பணம் சம்பாதித்தல் போன்ற தண்டனைக்குரிய குற்றங்களுக்கும் மன்னிப்பு அளித்ததும் அன்றி, மேற்கூறப்பட்ட குற்றங்களானது இலங்கைக்குள் உள் நுழையும் போது கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் உரிய சட்டங்களால் தண்டிக்கப்படுவதை உறுதி செய்த சுங்க சட்டமூலத்தையும் வஞ்சகமான முறையில் இந்த முற்றிலுமான பொது மன்னிப்பில் உள்ளடக்கியிருந்தது*

United Nations S/RES/1373 (2001)

**Security Council**

Distr.: General

28 September 2001

***"தீர்மானம் 1373 (2001)***

***செப்டம்பர் 28 2001ல் இடம்பெற்ற பாதுகாப்பு சபையின் 4385வது கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது."***

*இந்த பின்னணியில் நூலாசிரியர்,*மேற்குறித்த 2003 ஆண்டின் 10ம் இலக்கஉள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டத்தினை இலங்கையின் அதி உச்ச நீதிமன்றான இலங்கை உச்ச நீதிமன்றில் குறித்த 7 நாள் கால எல்லைக்குள் "சாத்தியமற்ற கோட்பாடு" என்ற பெயரில் சவாலுக்கு உட்படுத்தியமையானது, பொது விவாதத்தினையும் அதனூடான பொது கருத்தினையையும் ஏற்படுத்த வழிவகுத்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் A.S. ஜயவர்தன அவர்கள் இந்த முற்றிலுமான பொது மன்னிப்பு சட்டத்தின் நிதி தாக்கம் குறித்து தெரியாது என்பதை ஒப்புக்கொண்டார். *ஆதாரம் :*

A. S. Jayawardena
The Governor

**Central Bank of Sri Lanka**
30, Janadhipathi Mawatha
. Colombo 1, Sri Lanka.

02 JUN 2003

Your Ref. PH/Cosec/M/8/2/2003

30 May 2003

Mr. W. J. S. Karunaratne
Secretary to the President
The Presidential Secretariat
Colombo 1

Dear Sir,

I thank you for your letter No. PH/Cosec/M/8/2/2003 of 22 May, 2003 seeking information pertaining to the Inland Revenue (Special Provisions) Act by 3 June. Since the enactment of the above Act, we have commenced an estimation of its financial impact. This requires collecting detailed information from a large number of institutions and would therefore take some time.

We shall communicate with Her Excellency as soon as our study is completed.

Yours faithfully,

CC: Secretary
Ministry of Finance
(encl. Letter from Secretary to the President)

P.O. BOX 590 Colombo | TEL.: (941) 477477 (941) 477577 | FAX: (941) 477677 | E-mail: jayawar@lanka.ccom.lk asjayaward@cbsl.lk

நூலாசிரியரின் மனுவானது பல்வேறு முக முக்கியமான தரவுகளை கொண்டிருந்ததை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றமானது, 2003 ஆண்டின் 10ம் இலக்கஉள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டத்தினை அரசியல் யாப்பின் பிரகாரம்,பாராளுமன்ற கட்டளை புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் நூலாசிரியர் சவாலுக்குட்படுத்த தவறியமை காரணமாக இந்த மனுவை பரிசீலிக்க முடியாது என்று கூறியதுடன் உச்ச நீதிமன்றானது உத்தியோகபூர்வமாக விசேட தீர்ப்பொன்றை வழங்க முடியாமலும் போனது.

இதற்க்கு முரணாக 2003 ஆகஸ்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது சர்வதேச ஆலோசகர்களை இணைத்துக் கொண்டு தக்கவைக்கும் மையம் என்ற பெயரில் இரண்டு ஏற்புடைய வேலைத்திட்டங்களை செய்து அறிக்கைகளை 16.04.20014ல் வெளியிட்டது. ஆதாரம்

BearingPoint.

**ASSESSMENT FOR REVENUE ADMINISTRATION REFORM IN SRI LANKA**
**FINAL REPORT**

*FINAL REPORT*

PREPARED FOR:

ASIAN DEVELOPMENT BANK

16 APRIL 2004

BearingPoint.

**DESIGN AND IMPLEMENTATION PLAN FOR A REVENUE AUTHORITY FOR SRI LANKA**

***FINAL REPORT***

PREPARED FOR:

THE REVENUE STEERING COMMITTEE

16 APRIL 2004

30.06.2003 ல் திகதியிடப்பட்ட முற்றிலுமான பொதுமன்னிப்பு சட்டத்தினை குறித்து பொதுமக்களிடையே காணப்பட்ட முரண்பாடுகளின் பின்னணியில்,உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தகவல்களை வெளியிடுவதில் நபர்கள் காட்டிய தயக்கத்தை நிமித்தமும், மேற்குறித்த இலங்கை உச்ச நீதிமன்றின் அறிவிப்பின் பின்னர்,இலங்கை அரசாங்கமானது இத்தகவல்களை 1.7.2003-31.08.2003 வரையான காலப்பகுதிக்குள் கொடுக்கும்படிக்கான பிறிதொரு சட்ட மூலத்தை 2003ம் ஆண்டின் 31ம் இலக்க உள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) (திருத்தப்பட்டது) சட்டம் என்ற பெயரில் நிறைவேற்றப்படுவதற்காக சமர்ப்பித்தது.

நிதியமைச்சர் K.N. சொக்சி அவர்களால் இந்த முற்றிலுமான பொதுமன்னிப்பு சட்டம் தொடர்பில் சரியான விளக்கத்தை கொடுக்க முடியாது போனதுமன்றி, 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் கேள்வியெழுப்பியதோடு, இந்த சட்ட மூலத்தை நீக்குமாறு அமைச்சரவைக்கு குறிப்பொன்றையும் அனுப்பினார். ஆதாரம்

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

*9th July 2003*

*Hon.K.N.Choksy PC MP*
*Minister of Finance*
*Ministry of Finance*
*Colombo 1.*

*Dear Minister*

***Loan Agreement – City Bank N.A. Tokyo***

*I am in receipt of your letter of 3rd April 2003 replying my letter of 14th February 2003, after several reminders.*

*Subsequently I am informed, despite your evasiveness on the issue, that the Government would be loosing revenue estimated at over Rs.100 billion through the provisions of the general indemnity and pardons legislation proposed by you and introduced by the Government as tax, customs and foreign exchange amnesty legislation.*

*Could you be kind enough to explain the rationale why Government finances require a further injection of US$100 million from foreign commercial banks on commercial terms, when the Government claims the inflow of US$4.5 billion in aid money and can afford to write off penalties dues and levies due of approximately US$1 billion through amnesties.*

*Yours sincerely*

***Chandrika Bandaranaike Kumaratunga***

Democratic Socialist Republic of Sri Lanka

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

**NOTE TO THE CABINET**

**Repeal of the Inland Revenue (Special Provisions) Act No. 10 of 2003**

XXXXXXXXXXXXXXXXXXXXX

In view of the above, I suggest that all action under this Act No. 10 of 2003 be suspended forthwith and approval of the Cabinet of Ministers be granted to move Parliament to repeal the said Act.

**Chandrika Bandaranaike Kumaratunga,**
**PRESIDENT**

July 10, 2003

Democratic Socialist Republic of Sri Lanka

*நூலாசிரியர் குறித்த மசோதாவில் உள்ள காரியங்கள் மீண்டும் சட்டமாக்கப்படும் பட்சத்தில் அதனை சவாலுக்குட்படுத்த தனக்கு உரிமை உண்டென்ற வகையில், உச்ச நீதிமன்றில் அரசியலமைப்பின் பிரகாரம், சட்டமூலமானது பாராளுமன்ற கட்டளை பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் அதனை சவாலுக்குட்படுத்தினார்.*

*இதேவேளை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் பின்வரும் கடிதத்தினை சட்டமா அதிபரான K.C. கமலசபேசனிற்கு அனுப்பி வைத்தனர்*

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

*1st August 2003*

*K.C. Kamalasabayson PC*
*Attorney General*
*Attorney General's Department*
*Colombo 12.*

*Dear Attorney General,*

***"Inland Revenue (Special Provisions) (Amendment)***
***A Bill to Amend the Inland Revenue (Special Provisions) Act No. 10 of 2003"***

*I draw your kind attention to Article 77 (1) of the Constitution, whereby, you, as the Attorney General, is constitutionally bounden in duty to examine every Bill for any contravention of the Constitution and for any provisions, which cannot be validly passed, except by the special majority prescribed by the Constitution.*

*The aforesaid Amendment Bill to give further effect to the provisions, which were operative only up to 30.6.2003, of the said piece of legislation, for a further period has been placed on the Order Paper of Parliament on 25.7.2003. This Amendment Bill, I am advised, by reference adopts all the provisions of the aforesaid piece of legislation. In terms of the above constitutional mandate, I require you, as a matter of national and public interest, to forward to me, as a matter of urgent priority, your opinion on the constitutionality of all the said provisions, inasmuch as you forwarded me an unsolicited opinion, respecting a request that is said to have been made to you by the Government Printer.*

*I am constrained to remind you, the dicta of the unanimous determinations made with regard to Presidential powers by a Seven Member Bench of the Supreme Court in relation to the aborted 18th and 19th Amendments to the Constitution.*

*Yours sincerely*

***Chandrika Bandaranaike Kumaratunga***

Democratic Socialist Republic of Sri Lanka

*இதனை தொடர்ந்து, நூலாசிரியரின் மனு மீதான விசாரணை 18.08.2003அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மேற்குறித்த 2003ம் ஆண்டின் 10ம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அம்சங்கள் 30.06.2003 அன்று செயலிழந்ததுள்ளமையானது உச்ச நீதிமன்றினால் விசாரணைக்குட்படுத்த தவறியதனாலும், அதே அம்சங்களை கொண்ட சட்டமூலத்தினை 1.7.2003முதல் 31.08.2003 வரையான காலப்பகுதியில் மீண்டும் சட்டமாக்க முயற்சிக்கின்றமையினால் அரசியல் யாப்பின்படி நூலாசிரியருக்கு இடைக்கால தடையுத்தரவை உச்ச நீதிமன்றில் பெறுவதற்கான உரிமை உள்ளது என்று வாதிட்டார்.*

*அந்த வாதத்தினை பொருட்படுத்தாது, நீதியரசர் அமீர் இஸ்மாயில் தலை தாங்கிய நீதியரசர்களான P. எதிருசூரிய மற்றும் T.B. விஜேசூரிய ஆகியோர் உள்ளடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் "இது வெறுமனே ஒரு திகதி மாற்றம் மட்டும்தான்" என்று தீர்ப்பளித்தனர். ஆனாலும் உண்மை என்னவெனில், 2003ம் ஆண்டின் 10ம் இலக்க சட்டத்தின் அம்சங்கள் சட்ட ரீதியாக நீதித்தன்மை முடிவடைந்ததுடன், அதே அம்சங்களை உள்ளடக்கிய சட்ட மூலமானது புதிய சட்டமாக பிறிதொரு குழுவினருக்கு அமுலாக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இலங்கை பாராளுமன்றமானது இந்த சட்ட மூலத்தை 2003ம் ஆண்டின் 31ம் இலக்க (விசேட உள்ளடக்கம்) (திருத்தப்பட்டது) என்ற பெயரில் அங்கீகரித்தது.*

*மேற்குறித்த இரண்டாவது சட்ட மூலத்தை நூலாசிரியர் வெற்றிகரமாக சவாலுக்குட்படுத்த முடியாது போன அதே நேரத்தில் மேலும் இரண்டு சட்ட மூலங்களான 1990ம் ஆண்டின் 2ம் இலக்க கடன் மீள்பெறுகை (விசேட உள்ளடக்கம்) மற்றும் 1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகள் வழங்கிய கடன் மீள்பெறுகை சட்ட திருத்தத்துக்காக பாராளுமன்ற கட்டளை பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது, இந்த சட்டமூலங்களை தனிப்பட்ட முறையில் உச்ச நீதிமன்றில் ஆஜராகி எழுத்து மூலமும் மற்றும் வாய்மூலமும் அறிக்கைகளை சமர்ப்பித்து சவாலுக்குட்படுத்தினார்.*

நூலாசிரியர் இடைப்பட்டதன் பலனாக அரசியலமைப்பின் பிரகாரம் குறித்த சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதை உச்ச நீதிமன்றம் தடை செய்தது.


இந்த விசேட தீர்ப்பினை உச்ச நீதிமன்றின் பிரதம நீதியரசர் சரத் N சில்வா தலைமையிலான நீதியரசர்கள் P எதிருசூரிய,ஹெக்டர் S .யாப்பா, J.A.N. டி சில்வா, T.B. வீரசூரிய ஆகியோர் உள்ளடங்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு வழங்கியபோது,குறித்த இவ்விரு சட்ட மூலங்களின் திருத்தங்களுமானது பிறிதொரு கூட்ட நபர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படுவதாக கண்டமையானது, திருத்தங்களுடனான ஐந்தே சட்டமொல்லன்கள் மீண்டும் சட்டமாக்கப்படுகின்றமை பிறிதொரு கூட்ட நபர்களுக்காகவே என்கிற நூலாசிரியரின் வாதத்தினை உறுதி செய்தது.

இதனடிப்படையில், 2003ம் ஆண்டின் 31ம் இலக்க உள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டமூலம் மீதான தீர்ப்பில் இது வெறும் திகதி மாற்றமே என்பது பிழையானதும்,வெறும் கேளிக்கைக்கு உரியதுமாகும். இந்த ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவில், ஏற்கனவே நூலாசிரியரின் 2003ம் ஆண்டின் 31ம் இலக்க உள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டமூலம் மனு மீதான முரணான தீர்ப்பை கொடுத்த நீதிபதிகள் P .எதிருசூரிய,மற்றும் T.B. வீரசூரிய ஆகியோரும் அடங்கியிருந்தனர். இவர்களையும் உள்ளடக்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு வேறும் பல்வேறு காரணங்கள் உட்பட பின்வரும் காரியத்தை தீர்ப்பில் உள்ளடக்கியது.

> **"இந்த திருத்தம் தனிப்பட்ட முறையில் நோக்கப்பட முடியாது. அரசியல் யாப்பின்படி தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு முரணாக இது அமைய முடியாது......... சாதாரணமான வழக்கத்தை விட விசேடமான ஒரு நடைமுறையை கொண்டுவரும் எந்தவொரு சட்டத்தையும் .........நீதிமன்றம் நிராகரிக்கும்."**

மேற்குறித்த உச்ச நீதிமன்றின் தீர்ப்பில் இந்த சட்டமூலங்களை சட்டமாக்குவதை நீதிமன்று நிறுத்தியதுமல்லாமல், 1990ம் ஆண்டின் 2ம் இலக்க கடன் மீள்பெறுகை (விசேட உள்ளடக்கம்) மற்றும் 1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகள் வழங்கிய கடன் மீள்பெறுகை ஆகிய சட்டங்களில் காணப்பட்ட சரத்துக்களை கண்டித்ததுடன், "வழக்கமான நடைமுறைக்கு முரணான நேர்மையற்ற அடக்குமுறையான எந்தவொரு சட்டத்தையும் நீதிமன்றம் தடுக்கும் என்பதோடு, சட்டமானது பலமானவர்களை மேலும் பலமாக்குவதாகவும் வலுவற்றவர்களை மேலும் வலுவிழக்க செய்யும் ஒன்றாகவும் இருக்க முடியாது" எனவும் தெரிவித்திருந்தது.

இதன் விளைவாக முற்றிலும் பொதுமன்னிப்பு சட்ட மூலத்திற்கெதிராக வந்த பொதுமக்களின் கருத்திற்கு பின்பதாக, , 1990ம் ஆண்டின் 2ம் இலக்க கடன் மீள்பெறுகை (விசேட உள்ளடக்கம்) மற்றும் 1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகள் வழங்கிய கடன் மீள்பெறுகை ஆகிய முற்றிலும் பொதுமன்னிப்பு சட்டங்களை அரசியல் யாப்பின்படி தனக்கிருந்த உரிமையை பயன்படுத்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் உச்ச நீதிமன்றின் கருத்திற்காக அனுப்பி வைத்தார்.


President of Sri Lanka

8 March 2004

**Hon. Sarath N. Silva**
Chief Justice
Chief Justice's Chambers
Superior Courts Complex
Colombo 12

**Your Lordship,**

I am sending herewith a Reference under Article 129(1) of the Constitution with reference to the Inland Revenue (Special Provisions) Act No.10, 2003 as amended by Act No. 31 of 2003.

I shall be grateful if you would kindly place this before the Supreme Court for their decision.

Yours faithfully

**Chandrika Bandaranaike Kumaratunga**

Democratic Socialist Republic of Sri Lanka

இதன் விளைவாக உச்ச நீதிமன்றின் பிரதம நீதியரசர் சரத் N. சில்வா தலைமையில் நீதியரசர்களான, ஷிராணி பண்டாரநாயக்க,ஹெக்டர் S .யாப்பா, J.A.N. டி சில்வா, நிஹால் ஜெயசிங்க ஆகியோர் ஐவர் அடங்கிய நீதிபதி குழாமானது,அரசியல் யாப்பு மற்றும் நீதித்துறை அடிப்படையில் மிகவும் கடுமையாக, , 1990ம் ஆண்டின் 2ம் இலக்க கடன் மீள்பெறுகை (விசேட உள்ளடக்கம்) மற்றும் 1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகள் வழங்கிய கடன் மீள்பெறுகை ஆகிய சட்டங்களை குறித்த சட்டமூலமானது 'சட்ட அமுலாக்கத்திற்கு முரணானதும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் உடன்படிக்கையை மீறும் ஒன்றாகவும் பொது மக்களின் வருமானத்தை சூறையாடிய ஒன்றாகவும் மேலும் அரசிற்கு மிகப்பாரிய அரச வருவாய்க்கு இழப்பை விளைவித்த ஒன்றாகவும்' உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஐவர் அடங்கிய மேற்குறித்த நீதிமன்றின் தீர்ப்பானது, பொது இடங்களில் முரண்பாட்டை தோற்றுவித்ததுமன்றி குறித்த முற்றிலும் பொதுமன்னிப்பு சட்டமூலமானது பொது மக்கள் மத்தியில் அதிகமாக பேசப்பட்டதுமன்றி, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கால எல்லை முடிவதற்குள் 2004 ஏப்ரலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் முடிவெடுக்கப்பட்ட பொதுத் தேர்தலுக்கு வழிவகுத்ததோடு, அவ் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று.

- பிரபலமற்ற வரி பொதுமன்னிப்பு என்ற பெயரில் மிக அவசரமாக முற்றான ஒரு மன்னிப்பு சட்டத்தை 2003 ஆண்டின் 10ம் இலக்கஉள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டம் என்ற பேரில் வந்தமையானது, 2000ம் ஆண்டின் 38ம் இலக்க சட்டத்தில் காணப்பட்ட வருமானவரி பொதுமன்னிப்பு என்னும் தவறான அபிப்பிராயத்தை தோற்றுவித்தது. ஆட்டு போர்வைக்குள் பதுங்கியிருக்கும் நரியைப்போல் இந்த வரி பொதுமன்னிப்பு சட்ட மூலமானது, வருமானவரி தவிர்ந்த பின்வரும் சட்டங்கள் உள்ளடங்கலான இன்னும் அநேக சட்டங்களை கொண்டிருந்தது.
    - சுங்க கட்டளைச்சட்டம் (பகுதி 235)
    - பணமாற்று கட்டுப்பாட்டு சட்டம் (பகுதி 423)
    - இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டம் இல 1 1969
    - கலால் (விசேட உள்ளடக்கம்) சட்டம் இல 13 1989
    - கலால் கட்டளை சட்டம் (பகுதி 52)

- மேற்குறித்த சட்டங்களில் எவ்வித வரியும் அறவிடப்படவில்லை. மாறாக மேற்குறித்த இந்த சட்டங்கள் சில குற்றங்களை கட்டுப்படுத்துவதோடு, சட்ட அமுலாக்கத்தை வலியுறுத்தி சமுதாயத்தின் சரியான நடத்தையை உறுதி செய்யும். தண்டனை சட்டக்கோர்வையின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றவியல் குற்றங்கள் உட்பட கீழே உள்ள சில குற்றங்கள் மேற்குறித்த சட்டங்களிற்கு கீழே உள்ளடங்கும்.
    - தடை செய்யப்பட்ட போதைப்பொருள்,மருந்துகள்,ஆயுதங்கள்,மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தலான உபகரணங்கள் போன்ற கடத்தல் உள்ளடங்கலான கடத்தல்கள்.
    - வாடிக்கையாளர்களின் நலன் உட்பட நீதிக்கு முரணான பொருட்களை தயாரித்தல்/ ஒரே சாயலான பொருட்களை தயாரித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய அறிவுசார் சொத்துக்கள் சட்டத்தினை மீறல்
    - கசிப்பு போன்ற சட்டவிரோத வடிகட்டல் தயாரித்தாலும் வெளியீடுதலும்
    - பொது அல்லது தேசிய நலன்கருதி தடைசெய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல்
    - தேசிய பொருளாதாரத்திற்கு பாதகமான பணமாற்று கட்டுப்பாட்டு மீறல்கள்
    - இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மாநாடுகள் ஒப்பந்தங்களை மீறும் நடவடிக்கைகளான மனித கடத்தல்,போதைப்பொருள் கடத்தல், பயங்கரவாதம் போன்றவற்றின் மூலம் பெறப்படும் பணம்

- மாறாக சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் இன்னும் பல சட்டங்கள் சுங்க திணைக்களத்தால் நடைமுறை படுத்தப்படுகின்றன.
    - வெடிபொருட்கள் சட்டம்
    - ஆயுதங்கள் கட்டளை சட்டம்
    - ஆபாச வெளியீடுகள் கட்டளை சட்டம்
    - நஞ்சு, ஓபியம் மற்றும் ஆபத்தான மருந்துகள் சட்டம்
    - உணவு கட்டுப்பாட்டு சட்டம்
    - அறிவுசார் சொத்துக்கள் சட்டம்
    - தேயிலை கட்டுப்பாடு சட்டம்/இறப்பர் கட்டுப்பாட்டு சட்டம்
    - தொல்பொருட்கள் சட்டம்

- விலங்கின மற்றும் பூக்கள் கட்டளை சட்டம்
- மீன்பிடி மற்றும் நீர்வள சட்டம்

➢ ஆகவே போதைப்பொருள் கடத்தல்,ஆயுதங்கள் கடத்தல்,பணமோசடி செய்தல்,பயங்கரவாதத்திற்கும்/பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் நிதியளித்தல்,கசிப்பு வடிகட்டுதல் போன்ற குற்றங்களில் ஈடுபட்டோருக்கு இந்த வருமானவரி பொது மன்னிப்பு என்ற போர்வையில் முற்றிலுமான சட்ட தப்புதல் மற்றும் மன்னிப்பு வழங்கப்பட்டது.

➢ வருமானவரியோடு தொடர்பில்லாத மேற்குறித்த சட்டங்களையும் விட இந்த பிரபலமற்ற வரி பொதுமன்னிப்பு சட்ட மூலத்தில், மறைமுகமாக பொது வாடிக்கையாளர்களிடம் பெறப்படும் வரிகள் தொடர்பான சரத்துக்களும் அடங்கியிருந்தன, உதாரணமாக 2003ம் ஆண்டின் 10இலக்க உள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டமானது விசாரணைகளிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் விலக்களித்தது,

  - மொத்த வருமானவரி சட்டம் (1981ம் ஆண்டு 69ம் இல)
  - தேசிய பாதுகாப்பு வரி சட்டம் (1991ம் ஆண்டு 52ம் இல )
  - பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி சட்டம் (1996ம் ஆண்டு 34ம் இல)
  - முத்திரை வரி சட்டம் (1982ம் ஆண்டின் 43ம் இல)
  - நிதிச் சட்டம் (1963ம் ஆண்டு 11ம் இல)
  - தேசிய உள்ளீட்டு சேமிப்பு சட்டம் (1996ம் ஆண்டு 5ம் இல)

இதன் பிறகு பதவிக்கு வந்த மக்கள் முன்னணி அரசாங்கமானது, தனது முதலாவது சட்டமூலமாக உள்நாட்டு இறைவரி (பொதுமன்னிப்பின் ஒழுங்கமைத்தல்) சட்டமூலத்தை இலங்கை பாராளுமன்றில் சமர்ப்பித்தது. இந்த சட்டமூலத்தில் வருமானவரிக்கு மாத்திரமே பொது மன்னிப்பு அளிக்கப்பட்டிருந்ததோடு, எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொதுமன்னிப்பு சட்டத்தை நீக்கவும் செய்தது. குறித்த சட்டமூலமானது உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் விசேட தீர்ப்பளிக்கப்பட்டதன் பிரகாரம் 2004ம் ஆண்டின் 10ம் இலக்க உள்நாட்டு இறைவரி (பொதுமன்னிப்பு ஒழுங்கமைத்தல்) சட்டமாக இலங்கை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. ஆதாரம்

මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
**MINISTRY OF FINANCE**

මහ ලේකම් කාර්යාලය, කොළඹ 01. செயலகம், கொழும்பு 01. The Secretariat, Colombo 01.

Office 484500 484600 484700 — Fax (941) 449823 — Telex (941)21409 CE

My No. [illegible] — Your No. [illegible] — Date [illegible]

**"அமைச்சரவை பத்திரம்**

*2003 ஆண்டின் 10ம் இலக்கஉள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) சட்டம் மற்றும் 2003 ஆண்டின் 10ம் இலக்கஉள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்கம்) (திருத்தங்கள்) சட்டம் ஆகியவற்றின் நீக்கமும் 2002ம் ஆண்டின் 7ம் இலக்க உள்நாட்டு இறைவரி (விசேட உள்ளடக்க) சட்ட திருத்தங்களுக்கான அறிமுகமும்"*

எவ்வாறெனினும், உள்நாட்டு இறைவரை திணைக்கள அலுவலர்கள் பிரகாரம் 2004ம் ஆண்டின் 10ம் இலக்க உள்நாட்டு இறைவரி (பொதுமன்னிப்பு ஒழுங்கமைத்தல்) சட்டத்தில் காணப்பட்ட அம்சங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் காட்டியமையினால் , நூலாசிரியர் 2004ம் ஆண்டின் 10ம் இலக்க உள்நாட்டு இறைவரி (பொதுமன்னிப்பு ஒழுங்கமைத்தல்) சட்டத்தின் அம்சங்களை அமுல்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்தார்.

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
**MINISTRY OF FINANCE AND PLANNING**

මහ ලේකම් කාර්යාලය, කොළඹ 01. செயலகம், கொழும்பு 01. **The Secretariat, Colombo 01.**

Office 2484500, 2484600, 2484700 | Fax (94)-011-2449823 | Website www.treasury.gov.lk

My No. | Your No. | Date 1st July, 2005

Commissioner General
Dept. of Inland Revenue

Dear Sri,

**ENFORCEMENT OF INLAND REVENUE (REGULATION OF AMNESTY) ACT No: 10 of 2004**

Chairman, Public Enterprise Reform Commission has written to Her Excellence the President (a copy which has been submitted to me) informing that you have not responded to his letter dated 10.6.2005regarding the enforcement of Inland Revenue (Regulation of Amnesty) Act No:10 of 2004. He has further stated that you have not responded to 3 letters of Controller of Exchange as well.

Please clarify the position.

Yours faithfully,

P B Jayasundera
**Secretary to the Treasury**

Cc: Secretary to the President
Controller of Exchange
Chairman - PERC

*குறித்த அரச செயற்பட்டாளர்கள் சார்பில் கௌரவ சட்டமா அதிபர் K.C. கமலசபேசன் அவர்கள் குறித்த மனுவிற்கு ஒப்புதல் வழங்கும் வண்ணம் ஒரு தீர்வு ஒப்பந்தத்தை தயார் செய்திருந்தார். எனினும் உள்நாட்டு இறைவரை திணைக்கள அதிகாரிகளும் பின்னர் பதவியேற்ற சட்டமா அதிபர்களும் இதனை இழுத்தடித்து காரணத்தால், விசனத்தில், நூலாசிரியர் குறித்த முன்முறையீட்டு மனுவை முன்முறையீட்டு நீதிமன்றில் வாபஸ் பெற்றுக் கொண்டார். இது நல்லாட்சி அரசாங்கத்திற்கு முரணான கொள்கையை வெளிப்படுத்தியது.*

*மேற்குறித்த நடவடிக்கைகளை நூலாசிரியர் மேற்கொண்டிருந்த அதேவேளை, இப்படியான கொள்ளையடிப்புக்களையும்,பொதுமக்களின் வளங்களை முடக்கும்படியாகவும் மக்களின் நலனுக்கு விரோதமானதுமான சட்டங்களை செயற்படுத்தியதனையும்,இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் மீறல்கள் உட்பட குறித்த விடயம் தொடர்பாக பொறுப்புள்ள அமைச்சர்களின் தவறினையும் இப்புத்தகத்தில் இன்னுமொரு பகுதியில் மிக விபரமாக நூலாசிரியர் தந்துள்ளார்.*

*இவர்களுக்கு மாத்திரமல்ல, நூலாசிரியரினால் இந்த நிலைமையை உருவாக்கிய ஐக்கிய நாடுகள், சர்வதேச நாணய நிதியம்,உலக வங்கி,மற்றும் திறன்பெரன்சி சர்வதேசம் மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் சமர்ப்பிப்புக்களை மேற்கொண்டபோதும்,அங்கிருந்து பாராமுகமும், அமைதியுமே கிடைத்தமையானது,மேற்குறிப்பிட்ட பாரதூரமானதும் சட்ட அமுலாக்கத்தை பரிகாசத்திற்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேசம் பாராமுகமாய் இருந்தது என்பதை உறுதி செய்தது.*

*மேலும், ஏற்றுமதியாளர்கள் எல்லா ஏற்றுமதி வருமானங்களையும் இலங்கைக்கு சரியாக அனுப்பி வைப்பதில்லை என்பதனை இந்த புத்தகத்தின் இன்னொமொரு பகுதியில் நூலாசிரியர் தெளிவாக வெளிக்காட்டியுள்ளார்.*

*பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவராக நூலாசிரியர் பணியாற்றிய காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சம்மதத்துடன், பணமாற்று கட்டுப்பாட்டாளரை அவர்களுக்கு ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி வருமானத்தில் எவ்வளவினை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்பது தொடர்பில் ஒரு தன்னார்வ கணக்கெடுப்பை மேற்கொண்டு விபரங்களை வெளியிடுமாறு வலியுறுத்தினார்.*

**Notification to All Exporters**

Central Bank of Sri Lanka (CBSL) will introduce an export proceeds monitoring mechanism to improve the . foreign exchange management system. The information that the Central Bank will be collecting under this system will also help to improve the compilation of balance of payments statistics and analysis of external sector developments. All exporters are kindly requested to furnish details on exports and export proceeds to me on a quarterly basis.

This monitoring mechanism will be implemented with effect from 03 January 2005. The relevant forms with the necessary guidelines will be made available to all exporters.


**H.A.G. Hettiarachchi**
**Controller of Exchange**
**H.M.P. Herath**
**Add. Controller of Exchange**


Exchange Control Department
**Central Bank of Sri Lanka**
30, Janadhipathi Mawatha, Colombo 01.
Telephone : 2477244, 2477240 Fax : 2477716
E-mail: ecd@cbsl.lk
Website : http//www.centralbanklanka.org

*50%* ஏற்றுமதியாளர்கள் இந்த தன்னார்வ கணக்கெடுப்பில் கலந்து கொண்டு,*30.09.2004* அன்றுடன் முடிவுற்ற காலாண்டில் இடம்பெற்ற ஏற்றுமதிகளின் *19%* மான வருமானம் அடுத்த காலாண்டின் முடிவான *31.12.2004* வரை இலங்கைக்கு திருப்பப்படவில்லை என தெரிவித்ததோடு,அதில் *10%* மானவர்கள் தமது ஏற்றுமதி வருமானத்தில் *10%* வற்றை வேறே தேவைகளுக்கு வெளிநாடுகளில் செலவிட்டதாக அறிவித்தனர்.

| | அமெ.டொ | % |
|---|---|---|
| இலங்கைக்கு திருப்பப்பட்டது | *958,640,082* | *81.07%* |
| வெளிநாடுகளில் செலவினங்களுக்காக பாவிக்கப்பட்டவை | *121,111,158* | *10.24%* |
| வெளிநாடுகளில் வெளிநாட்டு கடன் மீள் கட்டணம் செய்தவை | *4,302,571* | *0.36%* |
| வெளிநாட்டு வணிக வங்கிகளில் வைக்கப்பட்டவை | *878,392* | *0.07%* |
| குறைந்த கப்பல் பெறுமதி | *8,620,554* | *0.73%* |
| இயல்பான வெளிநாட்டு கொள்வனவாளர்கள் | *1,439,411* | *0.12%* |
| வெளிநாட்டு கொள்வனவாளர்களின் மூலம் கிடைக்கப்பெற்றது | *87,531,779* | *7.40%* |
| மொத்தம் | *1,182,523,947* | *100.00%* |

இலங்கை உறுப்பினராக இருக்கும் IMF ன் சரத்து VIII இந்த பிரகாரம் ஏற்றுமதி வருமானமானது நாட்டுக்கு அனுப்ப அந்தந்த நாடுகளில் வைப்பிலிடப்படவேண்டும் என்பது ஒரு நியமமாகும். எவ்வாறெனினும் 1993லிருந்து பிழையான இரகசியமான முறையின் மூலம் ஏற்றுமதி வருமானம் இலங்கைக்கு அனுப்பப்பட்டு வைப்பிலிடுவதை கண்காணிக்கும் நாணயமாற்று கட்டுப்பாட்டாளரின் அதிகாரத்தை இலங்கை அகற்றியிருந்தது.



2015ம் ஆண்டு வரையான கடந்த 22 வருடங்களாக 10% மான வெளிநாட்டு நாணயமாற்று வருமதியான அமெரிக்க டொலர் 20,000 மில்லியனானது இலங்கைக்கு அனுப்பப்படாமையானது இலங்கை வெளிநாட்டு நாணயமாற்று சேமிப்பில் பாரிய இழப்பை கொடுத்தது. எனினும் 2016ம் ஆண்டு முதல் நூலாசிரியரின் தொடர்ச்சியான வற்புறுத்தலின் நிமித்தம் நாணயமாற்று கட்டுப்பாட்டாளரின் ஏற்றுமதி வருவாயை கண்காணிக்கும் அதிகாரங்கள் மீள நிலைநாட்டப்பட்டதுடன் ஏற்றுமதி வருமான ஒழுக்குகள் நிறுத்தப்பட்டன.

சரத்து VIII இனை அங்கீகரித்த பெரிய நாடுகளான சீனா, இந்தியா போன்ற நாடுகளிலும் ஏற்றுமதி வருமானங்கள் மீள நாட்டுக்குஅனுப்பப்படுவதை நிர்ப்பந்திப்பதுடன், அவை முறையாக நடைபெறுவதினை வலுக்கட்டாயமாக அந்நாடுகளில் கண்காணிக்கிறார்கள். இந்தியா மேலதிகமாக வெளிநாட்டு நாணயமாற்றில் இந்திய ரூபாய்க்கு மாற்றும் போது "சரணடையும் தேவை" என்பதனை வலியுறுத்துகிறது. ஆனால் இலங்கை இந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது நாணயமாற்று சேமிப்பில் வறிய நிலையில் இருப்பதுமன்றி, இந்தியா சீனா போன்ற நாடுகளில் இருந்து நாணயமாற்றுக்களை பெறுகின்ற நிலையில் இருந்துகொண்டு,ஏற்றுமதி வருமானம் மீள் வைப்பு செய்யப்படுவதனை கண்காணிப்பதை 1993ம் ஆண்டிலிருந்து உதாசீனம் செய்துள்ளது.

இந்த புத்தகத்தில் காட்டப்பட்டுள்ள இன்னுமொரு மிக சுவாரசியமான பகுதியாக திறைசேரியின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் மிக கடுமையான கண்டனத்துடன் கணக்காய்வு அதிபரினால் இலங்கை பாராளுமன்றிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாரிய VAT மோசடி காட்டப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டிலிருந்தே கணக்காய்வாளர் நாயகத்தினால் இந்த VAT மோசடி தொடர்பிலான கேள்விகள் எழுப்பப்பட்ட போதும், அவற்றிக்கு பதிலை கொடுக்க உள்நாட்டு இறைவரி திணைக்களமோ,திறைசேரியோ முன்வரவில்லை, இவ்விடயமானது கணக்காய்வாளர் நாயகத்தினால் இலங்கை பாராளுமன்றிக்கு சர்ப்பிக்கப்பட்ட விசேட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதாரம்

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
හයවැනි පාර්ලිමේන්තුවේ
(දෙවැනි සැසිවාරය)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 02

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது
ஆறாவது பாராளுமன்றத்தின்
(இரண்டாவது அமர்வு)

பாராளுமன்றத் தொடர் இல : 02

**PARLIAMENTARY SERIES No : 02**

**OF THE SIXTH PARLIAMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA**

**(SECOND SESSION)**

(ඉංග්‍රීසි මුද්‍රණය/ஆங்கிலப் பதிப்பு / English Print)

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 (6) ව්‍යවස්ථාව ප්‍රකාර

රාජ්‍ය බදු ආදායම් කළමනාකරණය ආශ්‍රිත විශේෂ
ව්‍යාපෘති විගණනය පිළිබඳව
විගණකාධිපතිවරයාගේ වාර්තාව


இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(6) ஆம்
உறுப்புரையின் பிரகாரம்

அரசாங்க வரி வருமானத்தின் முகாமைத்துவம் மீதான விசேட செயற்றிட்டக்
கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**REPORT OF THE AUDITOR GENERAL ON SPECIAL PROJECT AUDIT ON THE MANAGEMENT OF GOVERNMENT TAX REVENUE**

**IN TERMS OF ARTICLE 154(6) OF THE CONSTITUTION OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA**

இதேவேளை பொது நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவராக இருந்த நூலாசிரியர் 2004ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சம்மதத்தோடு இந்த VAT மோசடி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளரிடம் இருந்து கேள்விகளை எழுப்பியிருந்தார். இந்த பாரிய VAT மோசடி இருப்பதனை அவர் ஒப்புக்கொண்டதோடு,அது தொடர்பில் அவர் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற பயத்தினையும் கூறியிருந்தார்.




இந்த விடயத்தினை அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு தெரிவிக்க பயந்த வேளை, நூலாசிரியர் ஜனாதிபதி விசாரணை பிறிவிற்கூடாக குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்யும்படிக்கு இதனை கையாள்வதாக தன்னார்வமாய் முன்வந்தார்,எனினும் இதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் ஒப்புதல் அளிப்பதற்கு தயங்கினார்.

எவ்வாறெனினும், உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் திறைசேரியின் செயலாளரான P.B. ஜயசுந்தரவின் சம்மதத்தோடு இந்த பாரிய VAT மோசடி தொடர்பில் விசாரிக்கும்படி ஒரு உள்ளக விசாரணை ஆணைக்குழுவை நியமித்து அதனூடாக இந்த பாரிய VAT மோசடி தொடர்பிலான ஆவணங்கள், தேவையான தரவுகள், மற்றும் பதிவுகள் என்பன காணாமற் போவதற்கும் அழிக்கப்படுவதற்கும் தேவையான கால அவகாசத்தை ஏற்படுத்தி கொடுத்தார். இது பின்னர் இடம்பெற்ற மேல்நீதிமன்ற குற்றவியல் வழக்குகளில் வெளிப்பட்டதோடு, இந்த VAT பாரிய மோசடியானது அரசினால் ஆரம்பிக்கப்பட்டவையாக கருதப்பட்டது.

இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேடமான இன்னுமொரு வெளிப்பாடு யாதெனில், உச்ச நீதிமன்றில் நூலாசிரியர் சவாலுக்குட்படுத்திய 2008ம் ஆண்டின் சொத்து அபகரிப்பு சட்டமூலம் தொடர்பானதாகும்.தனிப்பட்ட முறையில் ஆஜராகி திறமையாக வாய் மற்றும் எழுத்து மூல அறிக்கைகளை சமர்ப்பித்து உண்மையை வெளிக்கொணர்வதில் வெற்றியும் கண்டார். நூலாசிரியரின் வெளிப்பாடுகளில் திருப்தி அடைந்த உச்ச நீதிமன்றம், பாராளுமன்றில் நிறைவேற்றப்படவுள்ள ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் இலங்கை அரசின் முழு கடன் தொடர்பிலான தகவல்கள் வெளிப்படுத்தப்படாமை தொடர்பில் அதிர்ச்சி அடைந்ததோடு,புதிய அட்டவணை ஒன்றை ஒதுக்கீட்டு சட்டத்தில் சேர்ப்பதன் மூலம் இந்த தகவல்களை அரசியல் யாப்பின் பிரகாரம் வழங்குவதன் மூலம் இலங்கை பாராளுமன்றிக்கு இலங்கை அரசின் முழு கடன் தொடர்பிலான தகவல்களை வழங்கும்படிக்கும் செய்தது.

அதனை தொடர்ந்து பிரதம நீதியரசர் சரத் N சில்வா மற்றும் நீதியரசர்களான RANG அமரதுங்க மற்றும் PA ரட்நாயக்க அடங்கிய உச்ச நீதிமன்ற குழுவின் விசேட தீர்ப்பில், திறைசேரியின் சீரற்ற நிதி முகாமைத்துவத்தினை கடுமையாக கண்டித்ததுடன்,பாராளுமன்றின் விசேட அனுமதியின்றி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென திறைசேரி இரகசியமாக ஒதுங்கியிருந்த பணத்தொகையை அபிவிருத்தி நடவடிக்கை அல்லாத காரியங்களில் செலவழித்து இருந்ததையும் கண்டித்ததோடு, திறைசேரி தமக்கென பிரத்தியேக பாதீட்டை வைத்திருந்ததன் மூலம் பொது மக்களின் பணத்தை முகாமைத்துவம் செய்யும் நம்பிக்கையினை உடைத்துள்ளது எனவும் தெரிவித்திருந்தது.